பாடம் - 1
الدرس الأول

## முன்னுரை
## تمهيد

மனிதன் வாழுகின்ற இந்த பூமி, பரந்து விரிந்த அழகான இப்பிரபஞ்சம், இந்த வானம், அதில் மின்னுகின்ற லட்சக் கணக்கான நட்சத்திரங்கள் இவை அனைத்தும் சீரான ஒழுங்கமைப்புடன் செல்வதையும் இதோ இந்த பூமி, அதிலுள்ள மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், ஓடைகள், மரங்கள், விளைநிலங்கள், காற்று, நீர், கடல், திடல், இரவு, பகல் ஆகிய அனைத்தையும் மனிதன் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது அவனுள் ஒரு வினா எழுவது நிச்சயம்.

அதாவது இவற்றையெல்லாம் படைத்தவன் யார்? வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தண்ணீரை வானிலிருந்து பொழியச் செய்தவன் யார்? அதன் மூலம் மரங்களையும் செடி, கொடிகளையும் மலர்களையும் கனிகளையும் வெளிக் கொணர்பவன் யார்? அதன் மூலம் மனிதர்களுக்கும் கால் நடைகளுக்கும் தண்ணீர் புகட்டுபவன் யார்? அந்த நீரைத் தன்னுள் தேக்கி வைப்பதற்கு இப்பூமியைத் தயார்படுத் தியவன் யார்?

பொருட்களின் தேவைக்கேற்ப பொருத்தமான அளவுக்கு இப்பூமிக்கு ஈர்ப்பு சக்தியைக் கொடுத்தவன் யார்? அவ்வீர்ப்பு சக்தி கூடவும் செய்யாது. குறையவும் செய்யாது. கூடினால் அதில் நடமாடுவது சிரமமாகிவிடும். குறைந்தால் பொருட்கள் அனைத்தும் அதை விட்டும் பறக்கத் தொடங்கி விடும்!

மனிதனை எவ்வித முன்மாதிரியின்றிப் படைத்து, அழகிய உருவில் அவனை வடிவமைத்தது யார்? ஏன் மனிதன் தன்னை சிந்தித்துப் பார்ர்த்தாலே பல நூதனங்களைக் காண முடியும். இதோ பலதரப்பட்ட உன் உடற்கூறுகளை சிந்தித்துப் பார்! அவை எத்துணை நுட்பமான முறையில் செயல்படுகின்றன! அவற்றின் செயற்பாடுகளைப் பற்றி நீ அறிந்திருப்பது மிகக் குறைவே! பிறகு எப்படி அவற்றை உன்னால் கட்டுப்படுத்த முடியும்?

இதோ நீ சுவாசிக்கும் இந்த காற்றை சிந்தித்துப் பார்! ஒரு கனப்பொழுதேனும் அது உன்னை விட்டும் நின்று விட்டால் உன்னுடைய உயிர் பிரிந்துவிடுமே! இந்த சுவாசக் காற்றைப் படைத்தவன் யார்?

இதோ நீ அருந்தும் நீர், நீ உண்ணும் உணவு, நீ நடமாடும் இந்த பூமி, நீ அன்னாந்து பார்க்கும் இந்த வானம், உனக்கு ஒளி தரும் இந்தச் சூரியன், இந்த நிலா, இந்த நட்சத்திரங்கள் மற்றும் நீ காணும் ஒவ்வொன்றையும் சிந்தித்துப் பார்? அவையனைத் தையும் படைத்தது யார்?

அவன் தான் அல்லாஹ்! அந்த அல்லாஹ் தான் இவ்வுலக மனைத்தையும் படைத்தவன்! இவ்வுலகை நிர்வகிப்பவனும் அதிகாரம் செலுத்துபவனும் அவன் மட்டுமே. அவன் தான் உன்னுடைய இறைவன். அவனே உன்னைப் படைத்து உனக்கு உணவளித்தான். உன்னை வாழ வைப்பவனும் உன்னை மரணிக்கச் செய்பவனும் அவனே! இவ்வுலகம் அனைத்தையும் 'இல்லாமை" யிலிருந்து அவன் படைத்தது போல அவனே உன்னையும் 'இல்லாமை" யிலிருந்து படைத்தான்!

இத்தனைக்குப் பிறகும் 'இந்த உலகம் முழுவதும் வீணாகவே படைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் காலம் காலமாக இவ்வுலகில் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள், பின்னர் மரணிக்கின்றார்கள். அத்துடன் எல்லாமே முடிந்து விடுகின்றன" என ஒரு புத்திசாலி எண்ண முடியுமா என்ன? அப்படியால் உண்மை நிலைதான் என்ன? எதற்காக மனிதர்களாகிய நாம் படைக்கப்பட்டுள்ளோம்?

## எதற்காக நாம் படைக்கப்பட்டுள்ளோம்?

அல்லாஹ் ஒருனை மட்டும் வணங்குவதற்காகவே அவன் நம்மைப் படைத்துள்ளான். மேலும் அவனை எப்படி வணங்குவது என்பதை விளக்குவதற்காகவே நமக்கு இறைத் தூதர்களை அனுப்பி வேதங்களையும் இறக்கியருளினான். யார் அவனை வணங்கி, அவனுக்கே அடிபணிந்து அவன் விலக்கியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்கின்றாரோ அவர் அவனது திருப்தியைப் பெற்றுக் கொள்வார். யார் அவனை வணங்குவதைப் புறக்கணித்துவிட்டு அவனுடைய கட்டளை களுக்குக் கீழ்ப்படிவதை விட்டுவிடுகின்றாரோ அவர் அவனது கோபத்திற்கும் தண்டனைக்கும் ஆளாகிவிடுவார்.

இவ்வுலகை அல்லாஹ் செயற்களமாகவும் சோதனை கூடமாகவுமே ஆக்கியிருக்கின்றான். அதன் பிறகு மறுமை நாளில் அல்லாஹ் மனிதர்கள் அனைவரையும் விசாரணைக் காகவும் கூலி கொடுப்பதற்காகவும் மீண்டும் எழுப்புவான். அங்கே அல்லாஹ் சொர்க்கத்தைப் படைத்திருப்பான். அதில் எந்தக் கண்ணும் கண்டிராத எந்தக் காதும் கேட்டிராத எந்த மனிதரின் உள்ளத்திலும் உதித்திராத இன்பங்கள் இருக்கும். தன்னை நம்பி தன்னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த முஃமின்களுக்காக அதனை அல்லாஹ் படைத்துள்ளான்.

மேலும் அங்கு நரகத்தைப் படைத்திருப்பான். எந்த உள்ளத்திலும் உதித்திருக்காத விதவிதமான வேதனைகள் அதில் இருக்கும்.எவர்கள் அல்லாஹ்வை நிராகரித்து விட்டு மற்றவைகளை வணங்கினார்களோ மேலும் இஸ்லாத்தை விடுத்து வேறு வழிகளைப் பின்பற்றினார்களோ அவர்களுக்காக அல்லாஹ் அதனை தயார்படுத்தியுள்ளான்.

## இஸ்லாம் என்றால் என்ன?

இஸ்லாம் என்பது மனிதர்களுக்காக அல்லாஹ் தேர்ந் தெடுத்த மார்க்கமாகும். அல்லாஹ்வை மட்டுமே வணங்கி, அவனுடைய தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதுதான் இஸ்லாம். இஸ்லாம் அல்லாத வேறு எந்த மார்க்கத்தையும் எவரிடமிருந்தும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. இந்த இஸ்லாமிய மார்க்கம் குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் உரியதல்ல. மாறாக மனித சமுதாயம் முழுவதுக்கும் உரியதாகும். அல்லாஹ் தன்னுடைய அடியார் களுக்கு பல்வேறு கட்டளைகளை விதித்துள்ளான். மேலும் சிலவற்றை அவர்களுக்கு விலக்கியுள்ளான். அவனுக்கு யார் கட்டுப்படுகிறாரோ அவர் வெற்றி பெறுவார், தப்பித்துவிடுவார். அவனுக்கு மாறு செய்கிறவர் தோல்வி அடைவார், பெரும் இழப்புக்கு ஆளாவார்.
இஸ்லாம் ஒன்றும் புதிய மார்க்கமல்ல. மாறாக இந்த பூமியில் மனித வாழ்க்கை ஆரம்பித்ததிலிருந்து தனது அடியார்களுக்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்த மார்க்கம் ஆகும்.